**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.1242/2022**
**வழக்கு சாட்சி D.W.2 (3rd Party)**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.கொளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கருப்பணன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பெருமாள் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : போலியம்மனூர் கிராமம் | வயது | : சுமார் 69 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 27.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் என்ன உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். வழக்கு விபரங்கள் தெரியுமா என்றால் ? தெரியும். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் ? ஆமாம். எழுதப்படிக்க தெரியும். நான் எம்.ஏ படித்துள்ளேன். நான் போலியம்மனூர் கிராமத்தில் சுமார் 40, 50 ஆண்டுகாலமாக குடியிருந்து வருகிறேனா என்றால் ? இல்லை. போலியம்மனூரில் சொந்த வீடு, தோட்டம் உள்ளது என்றால் ? ஆமாம். வீடு, தோட்டம் வாங்கி சுமார் 40, 50 ஆண்டுகள் இருக்குமா என்றால் ? சரியாக நினைவு இல்லை. அவ்வளவு ஆண்டுகள் இருக்காது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க என்னை சரவணசாமி அழைத்து வந்தாரா என்றால் ? ஆமாம். அவர் தான் அழைத்து வந்தார். இந்த வழக்கினை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ? நாச்சிமுத்து வழக்கு போட்டுள்ளார். எந்த சொத்திற்கு என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? வெரியப்பூர் அருகே உள்ள நாகப்பன்பட்டி என்ற கிராமத்தில் உள்ள சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். சர்வே எண்.51/1M, சர்வே எண்.69/3 என்ற சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியாது. யாருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மீது வழக்கு போட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? சரவணசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மீது வழக்கு போட்டுள்ளார். அதற்காக தான் சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளேனா என்றால் ? ஆமாம். சரவணசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மீது நாச்சிமுத்து எதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? எதற்கு வழக்கு போட்டுள்ளார் என்று தெரியவில்லை. நாச்சிமுத்து தாக்கல் செய்துள்ள வழக்கில் எது உண்மை, எது பொய் என்று எந்த விபரமும் எனக்கு தெரியாது என்றால் ? நிலத்தினை நாங்கள் சரவணசாமிக்கு விற்பனை செய்துள்ளோம். சரவணசாமி என்பவரை உழவடை செய்யவிடாமல் தடுக்கிறார். ஏன் தடுக்கிறாய் என்று கேட்ட போது வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளார். வாதி மேற்சொன்ன விரபங்களை சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் ? ஆமாம். சரவணசாமிக்கு எந்த தேதியில் நான் சொத்தினை கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் ? நான் நேரடியாக சரவணசாமிக்கு விற்பனை செய்யவில்லை. நான் திருமலைச்சாமி என்பவருக்கு சொத்தினை விற்பனை செய்தோம். திருமலைசாமிக்கு எப்போது சொத்தினை விற்பனை செய்தோம் என்றால் ? ஞாபகம் இல்லை. திருமலைசாமிக்கு நாங்கள் விற்பனை செய்த சொத்துக்கள் எவ்வாறு எனக்கு பாத்தியம் என்றால் ? எனது தகப்பனாரின் வாரிசு நான் என்பதால் எனக்கு எனது தகப்பனார் வழியாக கிடைத்த சொத்து ஆகும். நான் திருமலைசாமிக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்தானது எந்த ஆவணத்தின் அடிப்படையில் கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் ? 2011ம் ஆண்டு சண்முகவேல், பெருமாள் ஆகியோர்களுக்கு பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது. எனது தகப்பனார் பெருமாள் இறந்த பிறகு அந்த சொத்துக்கள் எனக்கும், எனது சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்டது. சண்முகவேல் என்பவர் என்ன உறவாகிறது என்றால் ? எனது தகப்பனாருக்கு பங்காளி. நாச்சிமுத்து என்பவருக்கு தகப்பனார் ஆவார். நாச்சிமுத்து என்பவரின்

பாட்டனாரும், எனது பாட்டனாரும் உடன்பிறந்த சகோதாரர்கள். 2011ம் ஆண்டு எனது தகப்பனார் பாகம் பிரித்து கொண்டதாக சொல்லியுள்ள நிலையில் அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ? கையொப்பம் செய்துள்ளேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் விபரங்கள் தெரியுமா என்றால் ? தெரியும். எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கான நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் ? தெரியும். 2011 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ளபடி தான் 2015ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் சொத்துக்களை பற்றி நான்கு எல்லைகள், பரப்பு, விஸ்தீரணம், சர்வே எண் ஆகியவைகள் குறிப்பிட்டு பத்திரம் ஏற்படுத்த வேண்டும் என்றால் ? சரிதான். ஆனால், நான்கு எல்லைகள் குறிப்பிடும் போது கிழக்கு, மேற்கு என்பதில் தவறுதலாக தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளது. தட்டச்சு பிழை ஏற்பட்ட விபரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் ? திருமலைசாமி என்பவர் சரவணசாமிக்கு சொத்தினை விற்பனை செய்த பிறகு தான் தட்டச்சு பிழை ஏற்பட்ட விபரம் எனக்கு தெரிய வந்தது. நானுஂ, எனது சகோதரரும் சேர்ந்து திருமலைசாமிக்கு சொத்தினை விற்பனை செய்த போதும், அதே தட்டச்சு பிழையுடன் தான் சொத்தினை விற்பனை செய்தோமா என்றால் ? பிழை இருந்ததை பார்க்காமல் விற்பனை செய்துவிட்டோம். திருமலைசாமி என்பவரும் சொத்தினை விற்பனை செய்த போது தவறுதலாக தான் அதே தட்டச்சு பிழையோடு சரவணசாமிக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் ? ஆமாம். வாதி அவரது சொத்தை பிரதிவாதி அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கிரைய பத்திரம் எழுதியதால் அதன் மீது வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் நாங்கள் திருத்தல் பத்திரம் பதிவு செய்தோம் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 2015, 2019 ஆண்டுகளில் தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ள காரணத்தினால் தான் திருத்தல் பத்திரம் போடப்பட்டுள்ளது என்ற விபரங்கள் கண்டு திருத்தல் பத்திரம் எழுதப்பட்டுள்ளதா என்றால் ? தட்டச்சு பிழை என்ற வார்த்தை பத்திரத்தில் இல்லை. 2015ம் ஆண்டு நானும் எனது

சகோதரரும் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரமும், 2019ம் ஆண்டு நானும், எனது சகோதரரும் சேர்ந்து திருமலைசாமி என்பவருக்கு சொத்தினை விற்பனை செய்த கிரைய ஆவணங்கள் ஆகிய ஆவணங்கில் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிக்கும் நோக்கத்தோடு ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் ? சரியல்ல. சர்வே எண்.51/M கிணற்றுமேடு என்பது எத்தனை செண்ட் என்றால் ? 7 செண்ட் ஆகும். நான்குமால் தெரியுமா என்றால்? தெரியும். கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகியவைகள் பெருமாள்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும், தெற்கில் கிழமேல் பாதையும் உள்ளது. கடந்த 2011ம் ஆண்டு எனது தகப்பனாரும், நாச்சிமுத்துவின் தகப்பனாரும் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் கிணற்றுமேட்டை ஒட்டி கிழக்கு பக்கம் தென்வடல் பாதை உள்ளதா என்றால் ? கிணற்றுமேட்டை ஒட்டி காலியிடமும், காலியிடத்தை ஒட்டி கிழபுறம் தென்வடல் பாதையும் உள்ளது. தென்வடல் பாதைக்கு கிழக்கு பக்கம் யாருடைய நிலம் உள்ளது என்றால் ? சண்முகவேல் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது. சண்முகவேல் என்பவருடைய மகன் தான் வாதி என்றால் ? ஆமாம். கிணற்று மேட்டிற்கு கிழக்கில் தென்வடல் பாதை உள்ளது என்றாலும், தென்வடல் பாதைக்கு கிழக்கு வாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றாலும் ? சரிதான். கிணற்று மேட்டு பகுதியானது அனைவருக்கும் பாத்தியப்ப்ட்ட பொதுவான பகுதி என்றால் ? 7 செண்ட் பொதுவாக உள்ளது. 7 செண்ட் பூமிக்கு கிழக்கே பாதை உள்ளது என்றால் ? சரிதான். 7 செண்ட் நிலத்திற்கு கிழக்கே தென்வடல் பாதை என்பதற்கு பதிலாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்து என்று திருத்தல் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் ? சொத்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சாட்சி மீண்டும் கிணற்று மேட்டிற்கு கிழக்கே சரவணசாமிக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளதாக பதில் அளித்தார். கிணற்று மேட்டிற்கு கிழக்கே எத்தனை செண்ட் நிலம் சரவணசாமிக்கு உள்ளது என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ?

சரவணசாமிக்கு விற்பனை செய்த சொத்தில் 51/M என்ற புலத்தில் கிணற்று மேடு நீங்கலாக எவ்வளவு சொத்துக்கள் சரவணசாமிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் ? சர்வே எண்.51/M என்ற புலத்தில் 85 செண்ட்டில் கிணற்று மேட்டிற்கு பொதுவாக ஒதுக்கப்பட்ட 7 செண்ட் போக 78 செண்ட் நிலம் சரவணசாமிக்கு விற்கப்பட்டுள்ளது. அது இல்லாமல் மற்றொரு பகுதி கிழமேல் பாதைக்கு தெற்கே 46 செண்ட் சரவணசாமிக்கு விற்கப்பட்டுள்ளது. நாங்கள் கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தில் 89 செண்ட் மற்றும் 46 செண்ட் விற்பனை செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். 78 செண்ட் நிலத்தை விற்பனை செய்வதற்கு பதிலாக 89 செண்ட் என்று அதிக விஸ்தீரணம் கண்டு விற்பனை செய்துள்ள காரணத்தினால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் ? சரியல்ல. நான் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மூன்று ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் ? சரியல்ல. சொத்தினை அளவீடுகள் மேற்கொள்வதற்கு சட்டப்படியாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளோமா என்றால் ? என்னுடைய சகோதரர் நடவடிக்கை எடுத்தார். நான் எடுக்கவில்லை. நிலத்தினை விற்பனை செய்துவிட்டதால் உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு நிலத்தை அளக்கவில்லை. உத்தரவு நகலை சரவணசாமிக்கு கொடுத்துவிட்டோம். சரவணசாமி தாக்கல் செய்துள்ள உயர்நீதிமன்ற உத்தரவில் வட்டாட்சியரின் கோபுர முத்திரை உள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. சரவணசாமி சொத்தினை அளப்பதற்கு நடவடிக்கை எடுத்தாரா என்றால் ? இல்லை. தாவா சொத்துக்களை அனுபவவித்து வருவதை வாதி பலவருடங்களாக வாதி இடையூறு செய்து வருவதாக நான் சொல்லியுள்ள நிலையில் மேற்படி பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் ? நான் கொடுக்கவில்லை. எனது சகோதரர் கொடுத்திருப்பார். நான் சொல்வது தவறு என்றாலும், புகார் யாரும் கொடுக்கவில்லை என்றாலும் ? சரியல்ல. சொத்தினை அனுபவிக்க விட

மறுக்கிறார் என்று வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? தாக்கல் செய்யவில்லை. நான் சொத்தை விட்டு வெளியே வந்து சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது என்றாலும், எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்துவிட்டேன் என்றாலும், எந்தவொரு விபரமும் தெரியாமல் வாதிக்கு இடையூறு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இடையூறு செய்கிறேன் என்றால் ? சரியல்ல. நானும், எனது சகோதரர்களும் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரமும், நாங்கள் திருமலைசாமிக்கு சொத்தினை விற்பனை செய்த பத்திரமும், திருமலைசாமி பிரதிவாதிக்கு விற்பனை செய்த ஆவணங்களில் சரியான எல்லைகளை குறிப்பிடாமலும், விஸ்தீரணம் அதிகம் கண்டும், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்று உள்நோக்கம் கொண்டு மூன்று ஆவணங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.27 18:05:06 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்